அரியாலை

# ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையம்

1946–2006




# வைரவிழா மலர்

M. APCHUTHAN.



# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு:-

அரியாலை கலைமகள் சனசமூக நிலையம் தனது அறுபதாவது ஆண்டை அடைந்து இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். அரியாலை மக்களின் கலைபண்பாடு, பொருளாதாரம் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி போன்ற பணிகளை சிறப்பாக செய்து இன்று அறுபது வயதை அடைந்து இருப்பது, அரியாலை மக்களுக்கு மட்டுமன்றி ஏனையவர்களுக்கும் மனமகிழ்ச்சியை தருகின்றது. இன்று பல சுமைகளை சுமந்து வாழும் நம் மக்களுக்கு சனசமூக நிலையத்தின் பணி மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. ஊரில் வாழும் ஒவ்வொரு மனிதனுடைய நலனையும் கவனித்து சேவையாற்றி உள்ளது. இப்பணியை எதிர்வரும் காலங்களில் மேலும் சிறப்பாக செய்வதற்கு வைரவிழா மகுடம் வைத்தால் போல அமைந்துள்ளது. இச்சன சமூகநிலையத்தை ஆரம்பித்து அறுபது ஆண்டுகள் இப்பணியில் சேவையாற்றி தலைவர், செயலாளர், பொருளாளர் அனைத்து உறுப்பினர் களையும் வாழ்த்துகின்றோம். இன்று இப்பணியை தொடர்ந்து செயற்படுத்த இருக்கும் இளைய தலைமுறையினரையும் வாழ்த்துகின்றோம். அரியாலை கலைமகள் சனசமூக நிலையம் இன்று போல் என்றும் பல பணிகளை செய்து பல்லாண்டுகாலம் வாழ்ந்து சமூகத்திற்கு சேவையாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்,**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக,**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

A. KUMARATHASAN
KALAIMAGAL ROAD
ARIYALAI VE.
JAFFNA

# நிலையத் தலைவரின் நீங்காத ஆசைகளில்

நிலையத்தின் சமூக முன்னோடிகளால் எமது சமூகத்தின் விடியலுக்கும், மக்களின் வளர்ச்சிக்கும், உயரிய பண்பாட்டு விழுமியங்களுக்குமாய் 1946 இல் ஸ்தாபிக்கப்பட்ட அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையம் இவ் 60 ஆண்டுகள் வரை தனது நோக்கத்தின் பணியைச் சிறப்பாகச் செயலாற்றி வருவது கண்டு நான் பெருமகிழ்வு அடைகின்ற போதும், இதன் வெள்ளிவிழா, பொன்விழாக் காலங்களில் தனது பணிபற்றிய ஆவணங்களாகவும், அகம் மகிழும் அர்த்த முடனான கைங்கரியங்களையும் எதையும் செய்வதற்கு அக்கால கால நிலமைகள் கைகொடுக்காது போனது கவலைதரும் விடயமாகவே அமைந்து விட்டது.

அதன் ஆதங்கமாகவே எமது மக்களின் உள எழுச்சியையும், நிலைய வளர்பாதையின் வரலாற்றையும், பேணிக்காக்கும் ஓர் பொக்கிசமாக இந்த வைரவிழா மலரை நிலையத்தின் 60வது ஆண்டு அகவையில், அதிலும் முற்றிலும் இளைஞர்களைக் கொண்ட நிர்வாக சபையை எனது தலைமையில் கொண்டு வெளியிடுவது என் வாழ்நாளில் நான் கண்ட மறக்க முடியாத அனுபவமாகும். இவ்விழா சிறப்புற நிகழ்வதற்கும், இம் மலர் காவும் விடயங்களைத் தந்து அரும் சுவடாக அமைவதற்கும் ஒத்தாசை தந்த நிலைய மாதர்சங்கம், இளைஞர்கலாமன்றம், விளையாட்டுக் குழு, அறிவொளிக்கலை சஞ்சிகைப்பிரிவு, நூலகம், முன்பள்ளி, சிறுவர் அரங்கம், நாடக மன்றம் போன்றவற்றை நாம் மறவோம்.

ஆல் போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி நின்று கால நீரோட்டத்தில் அடியுண்ட பல துன்பகரமான சம்பவங்களை எதிர் கொண்டு இளைஞர்களின் ஒன்றுபட்ட உணர்வாலும், உழைப்பாலும் இன்று வைரவிழா கொண்டாடுகின்றனர். எம்மக்கள்.

பழையன களைந்து புதியன புகுத்தி புத்தெழில் பெற்று நிற்கும் நிலையத்தை புதிய பரிமாணத்தில் அமைத்த இவர்களை நான் என்றென்றும் மறவேன் அவர்களினது வளமான வாழ்வுக்காக என்னை என்றுமே இணைத்திருப்பேன். அவர்களது உணர்வுக்கு என்றும் மதிப்பளிப்பேன்.

நன்றி

**இ. மதிகரன் தலைவர்,**
**அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச. நிலையம்.**

# நிலையச் செயலாளரின் நெஞ்சத்திரையில்



எமது சமூகத்தின் எதிர்காலம் குறிப்பாக நானும் ஓர் இளைஞன் என்ற வகையில் எம் இளைஞரின் எதிர்காலம் பற்றி என் நெஞ்சத்திரையில் எழுந்து நிற்கும் எண்ணங்கள் ஏராளம். அவ் எண்ணங்களுக்கு உயிர் கொடுக்கும் ஓர் உத்தம பணியாகவே இச் செயலாளர் சேவையைச் செய்கின்றேன். எனது சேவைக் காலத்தில் இந்நிலையத்தின் 60 வது ஆண்டு அகவை கொண்டாடப்படுவது கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஓர் சமூகத்தின் வளர்ச்சியோ விடிவோ அச் சமூகத்தைக் கொண்ட ஓர் சேவை நிறுவனத்தின் கைகளில்த்தான் உள்ளது. அத்தகையதொரு சேவை நிறுவனந்தான் சனசமூக நிலையங்கள். இந்த நிலையங்கள் தங்கள் பணிகளாக சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு செயலாற்றுவன. இத்தகைய சேவைகளைத்தான் எமது நிலையமும் கொண்டு இயங்குகிறது. சமூக மேம்பாடாக கல்வி, விளையாட்டு, உளவளர்ச்சி, நாவன்மை போன்றவற்றையும், பொருளாதார மேம்பாடாக கைத்தொழில், சுயவேலை வாய்ப்பு, சிக்கனம், சேமம், முதலீடு போன்ற துறைகளில் மக்களை ஈடுபடுத்தலையும், கலாச்சாரமேம்பாடாக இயற்றுறை, இசைத்துறை, நாடகத்துறை போன்றவற்றில் ஈடுபாடுகாட்டும் வகையில் எம் சமூகத்தை நாட்டம் கொள்வதற்கான வழிவகைகளைச் சமைத்தல் போன்ற நற்காரியங்களில் எனது நிர்வாகம் சிறப்பாகச்செயற்பட்டு வருகிறது.

60 ஆண்டுகளுக்கு முன்னர் எம் முன்னோர்கள் எந்த நோக்கத்திற்காக இந்த நிலையத்தை ஸ்தாபித்தார்களோ தற்போது அவர்கள் எண்ணம் ஈடேறியது கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். இருப்பினும் எமது இளைஞர்களுக்கான காலத்தின் தேவை ஓர் விளையாட்டு மைதானம் தான். இவ்வாறான மைதானம் ஒன்றைப் பெறுவது கூட ஓர் பெருங் காரியமல்ல. எமது சமூகத்தின் தன்நலமற்ற எண்ணத்தில் தோன்றும் தியாக சிந்தனையுடனான அர்ப்பணிப்புக்கள், ஒத்தாசைகள், நிதிஉதவிகள், இவையாவும் ஒருங்கே வரின் இந்த இலக்கை அடைவது எளிதான காரியமாகும். இக் காரியத்தை நிறைவேற்ற என் நெஞ்சத்திரையில் நிழலாடும் எண்ணக் கருவுக்கு உயிரூட்ட அனைத்து மக்களையும் அழைக்கின்றேன் இந் நாளில்.

ஐ. சிவகரன் செயலாளர்,
அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச. நிலையம்.

# நிலைய மாதர் அபிவிருத்திச் சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்னும் நல் வாக்கிற்கமைவாக, எமது மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவும், அறிவூட்டலை மேம்படுத்துவதற்காகவும், ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் என்னும் அறிவாலயம் 16.01.1946ல் நமது முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ் மாவட்டத்தின் முன்னோடி சனசமூக நிலையங்களில் ஒன்றான அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் இன்று தனது 60வது அகவையை நிறைவு செய்து "வைர விழா" என்னும் சிறப்பு நிகழ்வை நடாத்திக் கொண்டிருக்கின்றது. காலம் காலமாக இந்த நிர்வாகத்தை நடாத்தி வருபவர்கள் வாசிகசாலையுடன் மட்டும் நின்றுவிடாமல் நமது பெண் சமுதாயத்தின் வளர்ச்சியும், நன்மையும் கருதி, மாதர் சங்கத்தையும் இளைஞர்களின் விழிப்புணர்விற்காக "இளைஞர் கலாமன்றம்" என்ற துணை அமைப்பையும் ஸ்தாபித்துள்ளார்கள். அதுமட்டுமல்லால் நமது சிறார்களின் கல்வி வளர்ச்சி, கலை வளர்ச்சிக்காக நமது நிலைய நடப்பாண்டுத் தலைவர் திரு.இ.மதிகரன் அவர்களின் நிர்வாகத்தினரால் "சிறுவர் செயற்திறன் அரங்கம்" என்னும் அமைப்பும் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாறான நீண்ட வரலாற்றைக் கொண்ட அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் தனது வைரவிழாவை சிறப்பாக கொண்டாடுவது பொருத்தமானதாகும். இதன் வளர்ச்சி கண்டு நாங்கள் பேருவகை அடைகின்றோம். நமது நிலையம் எல்லா மக்களிற்கும் மேன்மேலும் பலசேவைகளைச் செய்து சிறப்புற பணியாற்ற மாதர் அபிவிருத்திச் சங்கத்தினரின். ஒத்துழைப்பும், நல்லாசியும் என்றும் உண்டு.

**வாழ்க பல்லாண்டு.**

**திருமதி, விக்னேஸ்வரன். ஸ்ரீரங்கமலர்**
**தலைவர்**
**மாதர் அபிவிருத்திச் சங்கம்**

# எனது உரை

அரியாலையூர் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் இவ்வாண்டில் தனது வைரவிழாவைக் கொண்டாடுவதையிட்டு மிகவும் அகமகிழ்கிறேன். நான் அறிந்த காலந்தொட்டு பாரம்பரியக் கலைகள் வளரவும், பல கலைஞர்கள் வளரவும் மிகவும் முக்கிய பங்காற்றியிருக்கிறது ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்.

அதுமட்டுமல்லாது விளையாட்டு துறையிலும் சரி, கல்வித்துறையிலும் சரி இங்குள்ள மக்கள், பிள்ளைகள் அன்று தொட்டு இன்று வரை சளைக்காமல் முன்னேறி வருவதையிட்டும் இக்கால முன்னேற்றகரமான பாதையிலும், ஏனையவர்கள் வியக்கும் வண்ணம் சீரிய பாதையில் கால் பதித்து கொண்டிருப்பதையும் ஏறு நடைபோட்டு கொண்டிருப்பதையும் நான் அறிந்து நேரில் கண்டு மிக மிக அகமகிழ்கிறேன்.

1980களில் எனது கட்டப்பிராய் கிராமத்தில் கலையை வளர்க்க இங்குள்ள மறைந்த கலைஞர்கள் சிலர் ஒத்துழைப்பு வழங்கியதை இன்றும் எண்ணிப் பார்க்கிறேன். தொடர்ந்து மன்றம் தனது பாதையில் முன்னேறுவதுடன் எதிர் காலத்து இளைஞர்கள் கல்விமான்களாகவும் விளையாட்டு வீரர்களாகவும் உருவாவதற்கு தொடர்ந்தும் உறுதுணைபுரியவேண்டும் என்று வேண்டிநிற்கின்றேன்.

நன்றி

**சீ. இலட்சுமிகாந்தன்**
**கிராம அலுவலர் யா/91**

# இளைஞர்களின் இதயத் துடிப்பிலிருந்து....

அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூகநிலையம் தனது 60 வது நிறைவு 'வைரவிழா' வினை கொண்டாடுவதில் இளைஞர்களாகிய எமது ஆற்றலினூடாக எமது கௌரவத்திற்குரிய தலைவர் திரு.மதிகரன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் கொண்டாடுவதில் அகமகிழ்வடைகிறோம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக மங்கிப்போயிருந்த எமது கலை, கல்வி, விளையாட்டு சமூக சேவை ஆற்றல்களை மீண்டும் வெளிச்சம் போட்டுக் காட்டிய பெருமை இவ் வைரவிழா நிர்வாகத்தையே சாரும். பழையன கழிந்து புதியன புகுத்தி புத்தெழில் பெற்று விளங்கும் எமது நிலையம் இன்று தரணியில் தன்னிகரற்று நிற்கின்றதென்றால், அது இளைஞர்களாகிய நாமே காரணம்.

இனிமேலும் இன்று போன்று என்றும் தொடர்ந்துவரும் பவள விழா, நூற்றாண்டு விழா என்பவற்றை அதிசிறப்பாக கொண்டாடுவோம் என்பது திண்ணம். அகிலம் உள்ள வரைக்கும் எமது முன்னோடிகளின் ஆசிர்வாதம் கிடைக்கட்டும். அந்த வகையில் வைரவிழாவில் இம்மலரை வெளியிடுவதில் இளைஞர்களாகியம் நாமும் இதயம் பூராக வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

நன்றி

நிலைய இளைஞர் கலாமன்றம்,
விளையாட்டுக்குழு, சார்பாக,
**திரு.க.றுபேஸ்.**



# வாழ்த்துரை

அரியாலையிலே பல்துறைப் பணியாற்றும் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் வைரவிழாக் கொண்டாடுவதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிலே சிறந்த சேவையாற்றும் சனசமூக நிலையங்களில் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையமும் ஒன்றாகும். அதுமட்டுமல்ல புகழ்பெற்ற பல கலைஞர்களை உருவாக்கிய பெருமையும் இந்நிலையத்திற்கு உண்டு. விளையாட்டுக்கழகம், மாதர் சங்கம், சிறுவர் மன்றம், அறிவொளிக்கலையகம் எனும் நூல் வெளியீட்டுப் பகுதி போன்ற அமைப்புக்கள் இச்சனசமூகநிலையத்தால் நெறிப்படுத்தப்படுவது பாராட்டுதற்குரியதாகும். பௌர்ணமி தினங்களில் கூட்டத் தொடர், விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளை நடாத்துதல் சர்வதேச தினங்களை நடாத்துதல், சிறுவர் நிகழ்ச்சிகளை நடாத்துதல் நிலையத்தின் முன்பள்ளி விளையாட்டு போட்டியை நடாத்துதல் இரத்த தான நிகழ்வை நடாத்துதல் முதலான போற்றத்தகு பணிகள் இவர்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. மாதந்தோறும் வெளியிடப்பட்டுவரும் "அறிவொளிக்கலை" என்ற கையெழுத்தும் பிரதி 100க்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

சமூகப் பணியாற்றும் இச்சனசமூக நிலையம் மென்மேலும் நற்பணிகளைக் காலத்தின் தேவை கருதி மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறேன். 1946 இல் நிறுவப்பட்ட அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் அறுபதாவது ஆண்டு நிறைவில் (வைரவிழா) வெளியிடுகின்ற இந்த மலர் வெளியீட்டுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி சு.தெய்வேந்திரம்**
**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம்,**
**நல்லூர்**

# வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் அறுபதாவது அகவைப் பூர்த்தி செய்து மணி விழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற மூத்த சனசமூக நிலையங்களில் ஒன்றாக "கலைமகள்" திகழ்ந்து விளங்குவதையும், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, விளையாட்டுத்துறைசார் பணிகளையும், சமூகத்தினை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்துவதில் அது கண்டுள்ள வெற்றியையும் நான் நன்கறிவேன்.

குறிப்பாக மாணவச் சமூகத்தினரது அறிவு, திறன், மனப்பாங்கு, மேம்பாட்டுக்கு பல்வேறு திசைகளில் திட்டமிட்டுச் செயற்படுவதுடன் வளர்ந்துவரும் சிறார்களது பல்வகைசார் ஆளுமைவிருத்திக்கு வித்திட்டிருப்பதுடன். " எதிர் வரும் காலம் இளைஞர்களது " என்பதற்கமைய நற்பிரசைகளை உருவாக்கி இந்நிலையத்தை உயிரோட்டம் உள்ளதாக இன்று வரை இயக்கக்கூடிய இளைய சமூகத்தினை உருவாக்கியிருப்பதும் இந் நிறுவனத்தினது சாதனை என்றே கொள்ளலாம்.

கடந்த காலங்களில் இடர்கள் மத்தியில் வளர்ந்து வந்த இத்தாபனம் - வரப்போகும் காலத்திலும் இச்சமூகத்தினை இயக்கும் உந்துவிசையாக அமைவது திண்ணம் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**வீ. இராசையா**
**மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்.**

# வைர விழா சிறப்புற வாழ்த்துகிறேன்

அரியாலை கிராமத்தின் மூத்த சனசமூக நிலையங்களில் ஒன்றாக ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம், பல கலைஞர்களையும், அறிஞர்களையும், கல்வி மான்களையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கி தலை நிமிர்ந்து நிற்கும் பெருமைக்குரியது. தனது முன்னேற்ற பாதையிலே வீறுநடை போட்டு 60வது அகவை அடைந்திருக்கும். இந்த வேளையிலே பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து இத்தனை ஆண்டுகள் வளர்த்து வந்த முன்னோடிகளை பாராட்டி வாழ்த்தி நினைவு கூருவதோடு வைர விழா சிறப்புற வாழ்த்துக் கூறுகின்றேன்.

மேலும் பலநூற்றாண்டு மலர்களை பெருமையோடு சந்திக் வேண்டும் என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. மீராஅருள்நேசன்,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ்த்துறை,**
**வலயக்கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.**

# வாழ்த்துச் செய்தி

அரியாலைப் பிரதேசத்திலுள்ள மிக மூத்த சனசமூக நிலையங்களில் ஒன்றான ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தின் வைரவிழாவையொட்டி வெளியிடப்படும் ஞாபகார்த்த நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

அரியாலைப் பதியின் கலைமகள் வீதியில் அன்னை கலைவாணியின் அருள் பெற்று கடந்த அறுபது வருடங்களாக இந் நிலையம் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருவது வரலாற்றின் பதிவு பெற்ற அடிச்சுவடுகளாகும். இந்த நிலையம் காலத்தின் தேவை கருதி இன்றைய காலகட்டத்தில் பல்வேறு சமூகநலப் பணிகளில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருவதை காணக் கூடும். இதற்கான இந்த நிலையத்தை ஆரம்பிக்க உழைத்த முன்னோடிகளும் இன்று நிலையத்தை மிகவும் முனைப்புடன் நடாத்திவருகின்ற நிர்வாகசபை உறுப்பினர்களும் சகலரது மனதிலும் நிலை நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

இந் நிலையம் விளையாட்டு கல்வி சமூகத் தொண்டு என்பவற்றில் வரலாற்றுப் பதிவுகளை ஏற்படுத்திவருகின்ற போதிலும் கலைத்துறையில் படைத்த சாதனைகள் தான் என் மனக் கண்முன் நிற்கின்றன. யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல இலங்கைத் தீவின் பல்வேறு இடங்களில் இசை நாடகத்துறையில் இந் நிலையம் ஏற்படுத்திய இமாலய சாதனையை வருங்காலத்தில் எவரும் மறக்க முடியாது. சொந்தக் குரலில் பாடி நடிக்கக் கூடிய பல நடிகர்களையும், சமூக, வரலாற்று நாடகங்களில் பார்வையாளர்களைக் கவர்ந்த நடிகமேதைகளையும் உருவாக்கிய பெருமை இந் நிலையத்திற்குண்டு.

எதிர்காலத்தில் இந் நிலையம் மேலும் மேலும் பல்வேறு துறையில் வளர்ச்சியடைய முன்னோடிகளின் வாரிசுகள் செயற்பட வேண்டும். இதற்கு அன்னை கலைவாணியின் அருள் கிடைக்க வேண்டுகின்றேன்.

"வளர்க சாதனையைப் பெருக்குக"

*40/2,கலைமகள் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

**த.பஞ்சலிங்கம்**
**சிரேஸ்ட துணைப் பொதுச்செயலாளர்**
**இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்**

# வாழ்த்துரை

ஒரு பண்பாட்டின் உயிர்மையங்களாக கிராமங்களின் வாழ்வும், வரலாறும், இந்தவகையில் எங்களது வரலாற்றில் இன்னமும் வாழும் கிராமமாக தப்பி பிழைத்து உயிர்ப்பூட்டும் பேறு பெற்றது. அரியாலை.எத்தனை இடர்களை சந்தித்த மனதும், தளரா மனதுடன் நிமிரும் அரியாலை கிராமபுலத்தின் வல்லமையில் அதன் சமூக ஒருமைப்பாடு முக்கிய இடம் பெறுவது, இந்த சமூக ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பதில் இங்குள்ள சன சமூக நிலையங்களின் பங்கு முதன்மையானது.

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் தன் 60 ஆண்டு கால வரலாற்று மேன்மையை கொண்டாடும் செய்தி பெருமைக்குரியது. ஒரு நீண்ட வரலாற்றில் பெருமைக்குரிய பணிகளால் மிளிரும் நட்சத்திரங்கள், இந்நாளில் கௌரவிக்கப் படுகின்றமை அர்த்தம் நிறைந்தது.

நல்ல வாழ்வுக்கு வழிகாட்டிய நட்சத்திரங்களை போற்றுகின்ற இந்த பொழுது, நாளைய நம்பிக்கைக்கான நட்சத்திர பொழுதாக்கின்றது. கூடி வாழ்தலின் கோடி நன்மைகளை அனுபவ தரிசனமாக்கும் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் செயல் வீரம், ஏனைய எங்கள் சனசமூக நிலையங்களின் புத்துயிர்ப்புக்கான உயிர் விசையாகும்.

கலை மகளுக்கு கோயில் கண்ட தனித்துவத்தின் வழி, சமூகப் பயனான அறிவின் உன்னதத்தை உணர்த்தும் அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலைய பணிகள் மென்மேலும் எல்லையில்லா பயன் கனிகளை எங்கள் சமூகத்துக்காக என்றென்றும் வழங்க என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**பேராசிரியர். என்.சண்முகலிங்கன்**
**(சமூகவியல் பேராசிரியர் தலைவர்,**
**அரசறிவியல், சமூகவியல்துறை.)**

***யாழ்ப்பாண பல்கலைக் கழகம்,***
***திருநெல்வேலி.***

# மக்கள் தேவை கண்டு சேவையாற்றும் நிறுவனம்



அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூகநிலையத்தின் சமூகப்பணி, செயற்றிறன், பிற் சந்ததிக்கான முன்சேர் துறைசார் விருத்திகள், கலையுணர்வு மற்றும் பல முற்பாங்கான செயற்றிட்ட வடிவங்கள் கண்டு என் மனதில் யாழ் மண்ணிலுள்ள சனசமூக நிலையங்களின் முன் ஓர் மூத்த நிலையம் என்பதை கண்ணுறுகிறேன். ஏனெனில் காலங்களின் எண்ணிக்கையைக் கொண்டல்லாது அதன் செயலான்மையைக் கொண்டே, அதன் வள்ர்ச்சித்தன்மைகளைக் கெண்டே ஒரு சனசமூக நிலையத்தின் முதுமையைக் காணலாம் என்பது எனது கருத்து.அவ்வகையில் 1946 முதல் இற்றைவரையான தனது 60 வயதினை நிறைவு காணும் இந்நிலையில் காலத்தால் அழியாத கவிஞர்கள், நடிகர்கள், இசைவல்லுனர்கள் எனக் கலைத்துறையிலும் டாக்டர், பொறியியலாளர், ஆசிரியர், மேதைகள் எனக் கல்வித்துறையூடான உதாரணபுருசர்களையும், கட்டிடத்தொழில் வல்லுனர்கள், மற்றும் பல துறைசார் துறை நிபுணர்கள் எனத் தன் ஆர்வத்தொழில்த்துறையிலும் தனது உறுப்பினர்களை உருவாக்க நிலை நின்றது இந் நிலையமெனலாம். இன்று எமது அரியாலைப் பிரதேசத்தில், எந்த நிலையிலும் ஓர் நாடகம் அரங்கேற்றப்படுகிறதென்றால் அங்கு பின் புலத்தில் இந் நிலையத்தின் ஓர் உறுப்பினர் இருக்கத்தான் செய்வார்.

இத்தகைய பெருமை நிறை இந் நிலையத்தின் உறுப்பினர்களில் காலம் சென்ற திரு.சி.கணேசன் மற்றும் திரு.செ.இராசரத்தினம் ஆகியோர் 1975 இல் எமது சங்கம் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தில் ஒப்பமிட்டு இச் சங்கத்தின் தோற்றத்துக்குக் காரணமாயிருந்த முதன்மை உறுப்பினர்களாய் இடம் பிடித்தவர்கள். அவர்கள் அக்காலத்தில் சங்கத்தின் தலைவர், செயலாளராக இருந்து திறம்படச் செயற்பட்டிருந்தார்கள். அது மட்டுமல்ல 1990 இல் இச் சங்கத்தில் மகளிர் குழு என்று ஓர் அமைப்பை உருவாக்கிய போது அதன் முதல் உறுப்பினராகவும், தலைவியாகவும், சங்கப் பணிப்பாளர் சபையின் மகளிர்குழுப் பிரதிநிதியாகவும் செயற்பட்டு தனது சேவைக் காலத்திலேயே அகால மரணத்தைத் தழுவிக் கொண்ட திருமதி.செல்வவதனா-சசிகரன் அவர்களை உறுப்பினராகக் கொண்டதும் இந் நிலையமாகும். இந் நிலையத்தின் உறுப்பினர்கள் பலர் எமது சங்கத்தின் உறுப்பினர்களாகவும் உத்தியோகத்தர்களாகவும் இணைந்து நற் பணியாற்றுவதை நான் கண்டு வருகிறேன். நிலையத்தின் உயர்ச்சி, எமது சங்கத்தின் நிலையம் சார் உறுப்பினர், உத்தியோகத்தர் நலன் போன்றவை கருதி வருடாந்தம் சங்கம் தனது பங்களிப்பைச் செய்து வருவதுடன் எதிர்வரும் காலங்களிலும் இவை தொடரும். இன்று தனது 60 வது அகவையைக் கொண்டாடும் இந் நிலையம் மேலும் பல நூறு ஆண்டு காலம் இயங்கி தம் மக்கள் தேவை கண்டு சேவையாற்றும் நிறுவனமாய் திகழவேண்டுமென ஆசிகள் கூறுவதுடன் இவ் வைரவிழா சிறக்க என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*15,நடுத்தெரு லேன்,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

து. சிவலிங்கம்
(தலைவர், அரியாலை பனை தென்னை வள அபி. கூட்டுறவுச் சங்கம்)

# ஆயகலைத்தாய்க்கு அகவை (௬०) அறுபது

நேற்றுப்போலிருக்கிறது நெஞ்சு கனக்கிறது
கடைசியாய் உனைக்கண்ட நினைவு
நித்திரையிலும் அறிவொளிக்கலைப் பத்திரிகை
நேர்த்தியாய்ப் படிக்கின்ற இனிய கனவு
ஆற்றுப்படை காட்டினாய் எனக்கு - எழுதினேன்
ஆயிரம் பாயிரம் உனக்கு
தோற்றுப் போகாமல் கல்வியில் திகழ்கிறேன்
தோற்காத தலைவன் கவியால் புகழ்கிறேன்
பலமேடை தானேறிப் பாராட்டைப் பெறுகிறேன்
பைந்தமிழில் பலகவிதை புனைகிறேன்
பலமான என்முதல் மேடை முத்தமிழே
பலநூறாய் நீ விரிக கலைப்புத்தகமே
கலையாழும் இலங்கையின் சலங்கையே
கலைஞர் பலநூறு கருத்தரித்த மங்கையே
நிலையான நிறைதமிழ்கலை நின்றாட - ஸ்ரீ
கலைமகள்த்தாயே முத்தமிழை முத்தமிட்டாயே.

அறுபது ஆண்டுகள் அறம் காத்தாயே
அறத்தோடு அன்பும் பண்பும் காத்தாயே - என்
இருபதில்தான் உனை இறுதியாய்ப் பார்த்தேன்
ஈழம் வந்து மீண்டும் எப்போ பார்ப்பேன்
அரியாலை மண்ணின் அதிகாலைப் பூவே - நீ
மாலையில் வாடிவீழும் மலரல்ல
அரியதமிழ்க் கலையின் அழகிய தீவே - உனை
அகிலம் விசாரிக்கும் இதுதீர்வே

**"செந்தமிழன்"**
**அன்புடன்**
**ரூபன் ரட்ணம்**

# வாழ்த்துரை

ஈழமணித் திருநாட்டின் வடபால் இலங்குகின்ற அரியாலைப் பிரதேசத்திற்கு ஒரு வரலாறு உண்டு. கல்விச்சீரும், கலையும் ஒருங்கேசேர, அறம் போற்றி சமயப் பற்றுடன் வாழ்வோர் எண்ணிறைந்து காணப்படுகின்றனர் இவ்வழியே, உளத்தூய்மையுடன், உண்மையொளியுடன் வணங்கி வருவோர்க்கு வற்றாத கல்விச் செல்வமும், கலைமேம்பாடும் தந்து நித்தியமாய் விளங்கும் அன்னைஸ்ரீ சரஸ்வதி அம்பாளுக்கு ஆலயம் அமைந்த வரலாற்றுப் பிரதேசமாகவும் எமது பிரதேசம் திகழ்கின்றது. 1929ம் ஆண்டு அமரர் கதிர்காமு வேலுப்பிள்ளை அவர்களினால் அவரது சகோதரன் நீலன் கணபதிப்பிள்ளையின் காணியில் சிறு குடிலில் ஸ்தாபகம் பெற்று மக்களினால் வணங்கப் பெற்று, மூர்த்திகரம் மிக்க ஆலயமாக சிறப்புற்று விளங்கி வருகின்றது. இவ் ஆலயத்தினை அடியொற்றியே 1946ம் ஆண்டு திரு. நீலன் கணபதிப்பிள்ளை அவர்களின் காணியின் முன்புறத்தில் கலைமகள் வாசிகசாலை எனும் அறிவாலயம் பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வமயம், இவ்விரண்டினையும் முன்னிலைப்படுத்தி பெரியார் - நீலன் செல்லக்கண்டு அவர்களால் இவை அமைந்துள்ள வீதிக்கு கலைமகள் வீதியென்ற திருநாமம் இடப்பட்டு அன்னாரது அயரா முயற்சியினால் புழக்கத்திற்கும் வந்தது. இதன்பின்னர் கலைமகள் வாசிகசாலை " ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் " என்ற பெரும் அந்தஸ்த்தினைப் பெற்றதுடன், கலை கல்வி வளர்ச்சியோடு இணைந்த பெருநிறுவனமாக இயங்கி வருவதும் யாவரும் அறிந்ததே! இவற்றின் அடிப்படையில் எமது சமூகத்தினை " கலைமகள் சமூகம் " என மற்றோர்கள் மதித்து எமக்கோர் உன்னத ஸ்தானத்தையும் பெற்றுத்தந்த ஸ்தாபனமாகவும் இருந்து வருகின்றது.

இவ்வகையில் எமது நிலையம் தனது அறுபதாவது ஆண்டு வளர்ச்சிப் படியில் எண்ணற்ற சேவைகளைச் செய்வதுடன் கிராமத்தில் உள்ளவர்களை ஆற்றுப்படுத்தும் ஒரு நிறுவனமாக வளரவும் அன்னை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் துணைபுரிய வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

ஐ. வரதராஜா
தலைவர்
அறங்காவலர் குழு சார்பில்
(ஸ்ரீசரஸ்வதி அம்பாள் ஆலயம் அரியாலை யாழ்ப்பாணம்)

# 60 வருட சேவையில் தனி இடத்தைப் பிடித்திருப்பது மகிழ்ச்சி தருகிறது

அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் அதன் அறுபதாவது அகவையொட்டி வெளியிடும் வைரவிழா நூலுக்கு எனது வாழ்த்துதல்களை எழுதுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த அறுபது ஆண்டுகளும் மக்கள் சேவையை மனதில் கொண்டு, கலை, கலாச்சாரம், மெய்வல்லுநர் போட்டிகள் ஆகியவற்றை வருடா வருடம் நடாத்தி மக்களை நல்வழி படுத்தி வரும் பெரும்கைங்கரியத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

கடந்த காலங்களில் பலவிதமாக கஷ்டங்களின் மத்தியில் வளர்ந்து இன்று வைரவிழாவைக் கானுகின்ற பேறு பெற்ற சமூகநிலைய மக்களுக்கும் அதற்காக இன்றுவரை உழைத்து வந்த சகல நிர்வாகிகளுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தங்கள் சேவைக்கும்**
**அன்புக்குரியவருமான**
**செ.ப. ஜீவானந்தன்**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

# 60 ஆவது அகவை வைரவிழா பத்திரிகைக் குழுவின் பரிவுரை

ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தின் 60 ஆவது அகவையில் வைரவிழா மலரை வெளியிடவேண்டும் என தலைவர் திரு.இ.மதிகரன் அவர்களின் பணிப்பை ஏற்று இம் மலரை வெளியிட முன்வந்தோம். இம் மலரின் ஆசிரியராக தெரிவுசெய்யப்பட்ட திரு.ந.இராமநாதன் அவர்கள் இவ்வூரில் தற்போது இல்லாததால் இதன் பொறுப்பை திரு.ஏ.வீரசிங்கம் அவர்களுடன் சேர்ந்து எமது குழு ஏற்றுக்கொண்டது. கூடியவரை நிலையத்தின் ஆவணங்களில் இருந்தே செயற்பாட்டு நிகழ்வுகளைப் பெற்றுக்கொண்டோம். ஆனால் பல வருடங்களுக்குரிய ஆவணங்கள் இல்லாமையாலும் சிலவற்றில் எழுத்துக்கள் அழிந்துள்ளமையாலும் பூரணப்படுத்துவதில் சிரமப்பட்டோம். இந்த ஆவணங்களில் உள்ள தகவல்களை தரும்படி நிலைய ஆர்வலர்களிடம் எமது நிலைய விளம்பரப்பலகையில் விளம்பரப்படுத்தினோம். நடைபெற்ற பொது நிகழ்வுகளிலும் சொன்னோம். சிலர் சில தகவல்களை தந்துதவினார்கள். அவற்றில் ஓரளவு ஊகித்து உண்மையானவற்றைக் கண்டு இத்துடன் இணைத்துள்ளோம். அத்தோடு இவ் அறுபது வருடத்திலும் செயற்பட்ட எல்லோரையும் பாராட்டுவதென்றால் இம் மலர் வெளியிடுவதற்கு பல ஆயிரங்கள் செலவாகும் என்பதாலும் இம் மலரை வாசிக்கும் அன்பர்களுக்கு அது சுவையாக இருக்காது என்பதாலும் நிலையத்தின் காணி, கட்டடம், போன்ற நிரந்தர அமைப்புக்களுடன் தொடர்புடையோரை மட்டும் சுட்டிக்காட்டி அவர்களோடு இணைந்த நிர்வாகிகளை அக் காலப்பகுதி நிர்வாகப் பட்டியலில் தெரிவித்துள்ளோம். தொடர்ந்து எமது நிலைய நிர்வாக அலகுகளைப் பற்றியும் அதனோடு இணைந்தவர்களை பட்டியல் மூலமும் பிரசுரித்துள்ளோம். எமது நிலைய வரலாற்றிலே நடைபெறும் நிகழ்வுகளில் அனைத்து நிர்வாகங்களும் எமது முதியோர்கள், கலைஞர்கள், சேவையாளர்கள், விளையாட்டு வீரர்கள் யாவரையும் அவ்வப்போது உள்ள நிர்வாகம் கௌரவிக்கத்தவறவில்லை. இம் மலரில் தவறவிடப்பட்ட விடயங்களை இனி தொடர்ந்து வரும் நிர்வாகங்கள் ஆண்டு விழா மலர்களில் வெளிப்படுத்த நிறைய சந்தர்ப்பம் உண்டு. இம் மலரின் ஆக்கங்களுக்கு சகலவிதத்திலும் உதவியவர்களுக்கு எமது வைரவிழா மலர்குழுவின் சார்பில் நன்றியை தெரிவிக்கின்றோம். யாரையும் இம் மலர் மூலம் வெளிப்படுத்தக் கூடாது என்பது எமது நோக்கமல்ல தவறுகள் இருப்பின் மன்னித்து எமக்கு பெருமனதோடு தெரிவியுங்கள் அவை மறு வெளியீடுகளில் முதன்மைப்படுத்தப்படும். மேலும் மலர் உருவாக்கத்திற்கு சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்தோர்க்கு எமது நன்றிகள்.

நன்றி

**வைரவிழா மலர்க்குழு**
**ஐ.குமரதாசன்**
**ஸ்ரீ.ஜனதா**
**பு.தஜிதரன்**
**ஏ.வீரசிங்கம்.**

# ஸ்ரீ கலைமகள் சன சமூகநிலைய 2006 ஆம் ஆண்டு வைரவிழா மலர்

அரியாலை யாழ்ப்பாணத்தின் பல கல்விமான்களையும் அரசில் அதியுயர் பதவி வகித்தவர்களையும், பக்திமான்களையும் இலங்கையில் புகழ்பெற்ற சிறந்த கலைஞர்களையும் பிரபல கட்டிடக் கலைஞர்களையும் பலவகைத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் கொண்ட விசாலமான கிராமமும், நகரமும் சேர்ந்த சிறப்பான ஊராகும். அவ்வூரிலே இசைநாடக கலைத்துறையில் புகழ்பெற்ற பல கலைஞர்கள் வசித்து வந்த அரியாலை மேற்குப் பகுதியில் இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் தோன்றி சிறப்புடன் மக்கள் சேவையாற்றும் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் 1946 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையத்தின் அங்கத்தவர்கள் கலைமகள் வீதி, கனகரட்ணம் வீதி, நொத்தாரிஸ்லேன், ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, பாரதிவீதி, கண்டிவீதி, திருமகள் வீதி, வேலப்பர் லேன், இராஜேஸ்வரி வீதி, மலர்மகள் வீதி, போன்ற இடங்களில் பரவலாக வசித்து வருகின்றார்கள்.

இப் பகுதிகளில் வாழும் மக்கள் 1946 க்கு முற்பகுதியில் நொத்தாரிஸ் லேனிலுள்ள ஸ்ரீ அண்ணமார் கோவில் பகுதியில் வடலி என்று அழைக்கப்பட்ட இடத்தில் கூடுதலாக வசித்து வந்தார்கள். இம் மக்களுடைய வரவு வடமராட்சியில் இருந்தே தொழில் காரணமாகவும், திருமணபந்தம் காரணமாகவும் யாழ்ப்பாணப் பகுதியில் காலூன்றியது. இப்பரவலான குடும்பங்கள் ஒன்றுபட்டு இந்நிலையத்தை உருவாக்கினார்கள். இதன் முன்னோடியாக இவ்வூரில் பிரசித்தி பெற்ற வைத்தியர் எம்.வீ.முருகேசு அவர்கள் சிறந்த கல்விமான். அத்தோடு பொது நோக்குடையவர் அவர் அக்காலத்தில் தனது முயற்சியால் மனோகரா சேவா சங்கம் என்ற மக்கள் சேவை சங்கத்தையும் தூதன் என்ற பத்திரிகையையும் நடாத்தி பொது சேவையை ஆரம்பித்தார். இதன்பின் மக்கள் தற்போது வசித்து வருகின்ற பகுதிகளில் நிலங்களை வாங்கிவீடுகட்டி வசித்து வருவதால் அப் பகுதியில் மையப்பகுதியான இடத்தில் அப்போது சாயக்காரன்புலம் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீ கலைமகள் வீதியோடிணைந்த வேலப்பர் லேனில் திரு.நீ.கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் காணியில் ஓர் சங்க கொட்டில் 1946.01.16இல் அமைத்து சமூக செயல்பாட்டை ஆரம்பித்ததாக நமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள். அச் சங்கத்துக்கு தலைவராக திரு.நீ.செல்லக்கண்டு அவர்களும் கவிஞர் வே.ஐயாத்துரை செயலாளராகவும் செயற்பட்டு பணியாற்றி உள்ளார்கள். தொடர்ந்து நடைபெற்ற இச்சங்கத்தை 1952 காலப் பகுதியில் மக்கள் சேர்ந்து திரும்பவும் கலைமகள் வீதியிலுள்ள திரு.நீ.கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் காணியின் மூலையில் இருந்த ஓர் கொட்டிலை எடுத்து ஓர் வாசிகசாலை அமைப்பாக்கினர். இவ் வாசிகசாலை அமைப்பு அரைச்சுவர் உடையதாகவும் நாலுபக்கமும் வெளிச்சம் வரக்கூடியதாகவும் அமைக்கப்பட்டு பத்திரிகைகள் போடப்பட்டு சிறப்பாக இயங்கியது. இதன்போது பல வாலிபர்கள்

இணைந்து நிர்வாகசபை தெரிவு செய்தனர். 1952 இல் பொதுக் கூட்டத்தில் தலைவராக திரு.வி.அரியகுட்டி அவர்களும் செயலாளராக வ.முருகேசு அவர்களும் உப தலைவராக க.சின்னத்துரை அவர்களும் பொருளாளராக வே.அரியதுரை அவர்களும் நிர்வாக உறுப்பினர்களாக கவிஞர் வே.ஜயாத்துரை, பொ.சிவநாமம் போன்றோரும் அங்கம் வகித்தனர். 1952 இல் இடம்மாறி புதிதாக அமைத்த இக்கட்டிடத்தை அமரர் பண்டிதர் கவிஞர் திரு.மு.செல்லையா ஆசிரியர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் நிலையம் சிறப்பாக இயங்கி வருகையில் 1955 காலப்பகுதியில் அமரர் திரு.நீ. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைவராக இருந்தபோது நிலையத்திற்கு ஓர் நிரந்தரமான காணி வாங்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது. இதன்போது எமது மக்களிடம் பணம் வசூலித்து காணிவாங்க தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு காணி நிதிக்காக அக்காலத்தில் மின் விளக்குகளால் ஒளியூட்டி சினிமாவைப் போன்ற சிறப்பான நாடகமாக பதவி மோகம் எனும் சரித்திர நாடகம் திரு.நீ.செல்லக்கண்டு அவர்களின் நெறிப்படுத்தலில் நிதிவசூல் நாடகமாக இடம்பெற்றது. இந்நிதி காணிவாங்குவதற்கு போதாதாக இருந்தது இன்னும் 75% பணம் தேவைப்பட்டது. அக்காலத்தில் நிதி சேகரிப்பதென்றால் மிகவும் கஸ்டம் இதனால் காணி வாங்கும் விடயம் தாமதமானது. இதனை உணர்ந்த நிலையப் பெரியார் திரு.வே.கதிர்காமு அவர்கள் பொறுப்பேற்று தனது பருத்த உடலோடு எமது மக்களிடம் இரவுபகலாக லாம்புடனும் ஊன்றுதடியுடனும் திரிந்து பேச்சு திட்டு வாங்கி காணி வாங்க பணத்தினை சேர்த்து 1958இல் திரு.வ.இராசையா அவர்கள் தலைவராக இருந்த காலப்பகுதியில் நிரந்தர காணி உறுதி முடிக்கப்பட்டது. இக் காணியின் முதல் உரிமையாளராக இருந்த வைத்தியர் கோபாலன் அவர்களால் திரு.வி.அரியகுட்டி தெய்வானை தம்பதியிர்க்கு கைமாறி மனமுவர்ந்து எமது நிலையத்திற்கு அறுதியாக விற்றுப் பணத்தைப் பெற்றனர்.

நிரந்தர காணி கிடைத்ததும் சுமார் 25 நீளமான பெரிய மண்டபத்துடன் ஒரு அறையும் சேர்ந்த கட்டிடம் போன்ற மண்டபத்தை எமது வாலிபரும் இளைஞர் கலமான்ற வாலிபரும் சேர்ந்து கட்டிமுடித்தனர் இம் மண்டபத்தை அமரர் நீ.கணபதிப்பிள்ளை அவர்கள் 1958 இல் திறந்து வைத்தார். இக் காலப்பகுதியில் திரு.வ.முருகேசு அவர்களின் பெருமுயற்சியால் எமது சனசமூக நிலையம் யாழ்.மாநகரசபையால் பதிவுசெய்யப்பட்ட வருடாந்த உதவிப்பணம் பெறும் சனசமூக நிலையமாக்கப்பட்டது. 1959 காலப்பகுதியில் அமரர் வ.நாகமணி அவர்கள் தலைவராக இருந்த காலத்திலே தற்போதுள்ள எமது நிலைய கட்டிடத்துக்கு அத்திவாரம் இடப்பட்டது. இதன் நாள் அத்திவாரக் கற்களை பிரபல வைத்திய கலாநிதி அ.தர்மலிங்கம், ஆனந்தவித்தியாசாலை அதிபர், ஆ.சிவக்கொழுந்து, ஜெ.ஞானப்பிரகாசம் (அ.இ.ச.சமூக நியை தலைவர் வ.இராசையா (ஆசிரியர்) ஆகியோர் வைத்து கட்டடம் ஆரம்பமாகியது தொடர்ந்து 10 வருடங்களாக பொது மக்களின் நிதியுடனும் உடல் உழைப்புடனும் கட்டடம்

நிறை வேறியது. 1969,70 காலப்பகுதியில் திரு.வே.மகேசன் ஆசிரியர் தலைமையில் செ.விசுயராசா, செ.செல்வநாதன் ஆகியோரினதும் அவர்களின் நிர்வாக அணியை சேர்ந்தவர்களின் முயற்சியால் கட்டடம் முழுமை பெற்றதெனலாம். பின்பு குறை வேலைகளை அடுத்து வந்த வே.மகேசன் தலைவர், திருவாளர்கள் ஏ.வீரசிங்கம், செ.செல்வதாஸ் செயலாளர்கள் பொருளாளராகிய ந.இராமநாதன் ஆகியோர் (எமது நிலைய கட்டிடத்தின் படத்தை வரைந்தவருமான பிரபல கட்டட ஒப்பந்தக் காரருமாகிய அமரர் ச.மயில்வாகனமும் அமரர் வ.தர்மராசா ஆகியோரின் சிபார்சினால் பிரபல வர்த்தகரும் சமாதான நீதவானுமாகிய அமரர் இ.சண்முகம் அவர்களின் நிதியுதவியுடனும் கட்டிட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 1971.09.02 அன்று உயர்திரு. இ.சண்முகம்(ஜே.பி) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்புவிழா கோலாகலமாக நடைபெற்றது. எமது நிலையத்தின் பின்புறம் உள்ள பாடசாலை, தலைவர் தி.சின்னையா, சிவனேசன் காலப்பகுதியில் அரசின் உதவியோடு தும்புத் தொழிற்சாலையாக ஆரம்பிக்கப்பட்டது. இது சி.திருநாவுக்கரசு அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் திறந்து வைக்கப்பட்டது. இது தொடர்ந்து இயங்காததால் அதுவே பாலர் பாடசாலைக் கட்டமாக மாறியது. இதனை 2003 செ.செலவநாதன் தலைவரின் நிர்வாகத்தின் முயற்சியால் அரசின் உதவியோடு புதுப்பிக்கப்பட்டது. மீண்டும் 2004 வ.வரதாபரன் தலைவராக இருந்த காலப்பகுதியில் சி.சிவதாசன், தி.சிவானந்தன் ஆகியோரின் முயற்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் அவர்களின் ஒதுக்கீட்டு நிதியில் குறைவேலைகள் யாவும் முற்றுப்பெற்றன. இருந்தும் இருந்த சிலவேலைகளையும் 2005 இல் முற்பக்கம் ஓர் சிறிய மண்டபத்தையும் தலைவர். மதிகரன் அவர்கள் அரசின் உதவியோடு செய்து முடித்து தொடர்ந்து பாலர் பாடசாலை நடைபெற்றுவருகின்றது. குறிப்பாக 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்விற்கு பின் எமது நிலையத்தில் ஏற்பட்ட சேதங்களை 1999 ஆம் ஆண்டு தலைவராக ஐ.வரதராசா இருந்தபோது சி.ஜெயக்குமார் அவர்கள் தானே பொறுப்பேற்று அரசின் உதவியோடு செய்து முடித்தார். தொடர்ந்தும் கட்டிடம் என்ற வகையில் நிலைய மேடையை திரு.க.தவம் அவர்கள் முன்னின்று கட்டிமுடித்து 1975 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் திரு.இ.சண்முகம்(ஜே.பி) அவர்களின் துணைவியாரால் திறந்து வைக்கப்பட்டது. எமது நிலைய நாயன்மார்கட்டு விளையாட்டு மைதானத்தில் தலைவர் சி.சிவநேசன் முதல் பெண் செயலாளர் நா.சசித்தா அவர்களின் காலப்பகுதியில், எமது நிலைய மைதானத்தில் பொதுமேடை அடித்தளம் கட்டி முடிக்கப்பட்டது. கட்டிட அமைப்புக்களின் இறுதி வடிவமாக 1985 காலப்பகுதியில் தலைவராக இருந்த திரு.செ.இராசரத்தினம் அவர்கள் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் குழாய் விநியோகத்திற்கு பல சிறுவர்கள் தமது உடல் உழைப்பை நல்கினார்கள். அவ்வேலைக்கு மாநகர சபையில் வழங்கப்பட்ட பணம் முழுவதையும் இராசரத்தினம் அவர்கள் நிலைய அபிவிருத்திக்கு வழங்கினார்கள்.

மேலும் 1987 காலப்பகுதியில் தலைவராக இருந்த எமது நிலைய மூதறிஞர் திரு.சீ.வைகுந்தசாமி அவர்கள் தலைமையிலான நிர்வாகத்தில் அப்போதைய போஷகர் திரு.செ.இராசரத்தினம் அவர்களது துடிப்பான செயற்பாட்டாலும் கிழக்குப்புற மதிலின் பெரும் பாகம் கட்டிமுடிக்கப்பட்டது. இவ்வாறே மீதி

மதிற்பகுதியினை திரு.சி.சிவதாசன் மற்றும் தி.சிவானந்தன் ஆகியோரது முயற்சியில் கட்டிமுடிக்கப்பட்டது. திரு.செ.செல்வநாதன் அவர்களது தலைமைக் காலப்பகுதியின் இறுதி நிகழ்வாக மைதானத்தின் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது. முக்கியமாக நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த எமது உறவுகளை அனுசரித்து ஆதரவு வழங்கியதில் முக்கிய பங்காற்றிய பெருமை திருவாளர்கள் வைகுந்தசாமி, இராசரத்தினம், அவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட நிர்வாகத்தையே சாரும். எமது நிலைய பற்றாளர் சுவிஸில் வாழும் திரு.ம. சுதா அவர்களால் அமரர் ம.செல்வரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக கணணி வழங்கப்பட்டதும் பெருமைக்குரியது.

## நிர்வாக அமைப்பும் செயற்பாடுகளும்

எமது நிலைய வரலாற்றில் நிர்வாகத்தில் பங்கேற்காதவர்கள் யாரும் இல்லை எனலாம். இருந்தபோதும் எல்லோருடைய சிறப்புக்களையும் பெயர்களையுயும் இம்மலரில் வரைவது கடினமாகும். அத்தோடு வாசகர்களுக்கு சலிப்புத் தட்டுவதாகவும் இருக்கும் புத்தக அமைப்பு பெருத்து செலவும் அதிகரிக்கும் யாரையும் தவிர்க்க வேண்டுமென்பது நோக்கமல்ல. அநேகமாக மத்திய நிர்வாகமே பின்வரும் சகல நிர்வாக அலகுகளுக்கும் பொறுப்பாகும். எமது நிலையத்தில் இயங்குகின்ற நிர்வாக விளையாட்டுப் பகுதி,கலைப்பகுதி, நூலகப்பகுதி, போன்றவையாகும். இப்பகுதிக்குரிய தனித்தனி அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை.

மத்திய நிர்வாகத்தின் வருடாந்த செயற்பாடுகளில் முதலாவதாக இடம்பெறுவது தைப்பொங்கல் கதம்ப நிகழ்ச்சி. இந்நிகழ்வு வருமானத்தைப் பெறும் நிகழ்வாக இருந்தாலும் தமிழர் திருநாளாம் பொங்கலை வரவேற்கும் ஓர்கலாசார நிகழ்வாகவே நாம் கொண்டாடுகின்றோம். எமது நிலையம் சூழவுள்ள அனைத்து பெரியோர்கள், இளைஞர்கள், பெண்கள், சிறார்கள், தமது இயல், இசை, நாடக வடிவங்களை அரங்கேற்றும் ஓர் சிறப்பு நிகழ்வாகும். எமது நிலையத்தைச் சேர்ந்தவர்கள் யாருமே பாட, ஆட, பேசத் தெரியாதவர்கள் இல்லை. எமது நிலையத்தின் பொங்கல் கதம்ப நிகழ்ச்சிக்கு யாழ்.மாவட்டத்தில் தனிச் சிறப்புண்டு. இதற்கு வித்திட்டவர்கள் அமரர்களான வே.க.இரத்தினம் (சோகசோபித சொர்ணக் கவிக்குயில்), வே.ஐயாத்துரை (கவிஞர்), வே.க.பாலசிங்கம் (கலாபூசணம், ஆசிரியர்), இவர்களின் சிந்தனையில் வந்தவையே கோலாட்டம், கரகாட்டம், பொம்மையாட்டம், பைலா நடனம். இந் நிகழ்வுகளை இவர்களை தொடர்ந்து இ.இராசையா, செ.இராசரட்ணம், க.செல்லத்தம்பி, ஐ.ஜீவதாசன் போன்றோர் நெறியாள்கை செய்தார்கள். ஆரம்பத்தில் இருந்து பாடல் இசைத்தவர்களில் திரு.பஞ்சாட்சரம் (விடவைத்தியர்), ஏ.வீரசிங்கம், நா.யோகநாதன் ஆகியோர் வயதாளிகள் ஆவர். இந்நிகழ்வோடு இணைந்தவர்களில் இராசா அண்ணர் எம்மால் மறக்க முடியாதவர். இவரே பைலா நடனத்தின் ஆரம்ப கர்த்தா.

அடுத்தது நிலைய நிர்வாகத்தின் பத்திரிகை, சஞ்சிகை போன்றவையை சந்தாப் பணத்திலும், அன்பளிப்பு போன்றவையைப் பெற்று மக்களின் வாசிப்பு

